# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

தலைமைக் கழகம்

எண்: 21/11, 1வது பிரதான சாலை, கற்பகம் தோட்டம், அடையாறு, சென்னை-600 020.
தொலைப்பேசி : 044 -2848 1235


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி:16.02.2026

**இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்தநாள் விழா:**

**மதுரையில் வரும் 24ம் தேதி இதயதெய்வம் அம்மா அவர்களின் திருவுருவச்சிலைக்கு கழக பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.**

**அன்றைய தினம் நாங்குநேரியில் கழகப் பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன் அவர்கள் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்தநாள் விழா வருகின்ற 24.02.2026 அன்று கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி அன்றைய தினம் மதுரை, கே.கே.நகரில் அமைந்துள்ள மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் திருவுருவச் சிலைக்கு கழகப் பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.**

மேலும், 25.02.2026 புதன்கிழமை அன்று திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் நடைபெறும் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்த இதயதெய்வம் அம்மா அவர்களின் **78வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் மாற்றியமைக்கப்பட்டு வருகின்ற 24.02.2026 அன்று அதே நாங்குநேரியில் கழகப் பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.**

இப்பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் மாநில, மாவட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், வட்ட, வார்டு, ஊராட்சி மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைக் கழகம்**

**அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்**